**நிதியியல் துறை பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்தல் செயற்றிட்டம் - கூறு 1 - 2025**

---

நிதியியல் துறை பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்தல் செயற்றிட்டம் - கூறு 1 இன் 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் 2024 சனவரி 31 ஆம் திகதியன்று கையொப்பமிடப்பட்ட 7418 - LK இலக்கக் கடன் உடன்படிக்கையின் 5.01 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் கால அளவு**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு இத்திட்டத்தின் நிறைவேற்று முகவராண்மையாகவும், இலங்கை வைப்புக் காப்புறுதி நிதியத்தின் சார்பில் செயற்படும் இலங்கை மத்திய வங்கி இத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தும் முகவராண்மையாகவும் விளங்குகின்றன.

வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் மீது கவனம் செலுத்தி, இலங்கையின் நிதியியல் துறை பாதுகாப்பு வலையமைப்பின் நிதியியல் மற்றும் நிறுவனசார் இயலாற்றலை வலுப்படுத்துவதே இச்செயற்றிட்டத்தின் நோக்கமாக காணப்படுகின்றது. இச்செயற்றிட்டத்தின் செயற்பாடுகள் கூறு 1, 2 மற்றும் 3 என மூன்று (03) கூறுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் 46,342 மில்லியன் ரூபாவிற்குச் சமனான 146 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியளிப்புச் செய்யப்படுவதற்கு உடன்பட்டுள்ளது.

இச்செயற்றிட்டம் அதன் செயற்பாடுகளை 2024 சனவரி 31 ஆம் திகதியன்று ஆரம்பித்ததுடன், 2027 திசம்பர் 31 ஆம் திகதியளவில் நிறைவு செய்யப்படுவதற்குக் திட்டமிடப்பட்டுள்ளது.

**1.3 அபிப்பிராயம்**

இச்செயற்றிட்டத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் கூற்றினையும் மற்றும் அதன் குறித்துரைக்கப்பட்ட கணக்கின் கூற்றினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்றிட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்றிட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான ஆளுகைக்குப் பொறுப்பானவர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

2. பௌதீகச் செயலாற்றுகை

2.1 செயற்றிட்டத்தின் செயற்பாடுகளின் பௌதீக முன்னேற்றம்

| | கணக்காய்வின் அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 நவம்பரில் வெளியிடப்பட்ட IPF கடன்பெறுநர்களுக்கான உலக வங்கியின் பெறுகை ஒழுங்குவிதிகளின் 4.4 ஆம் பிரிவின் (பெறுகைத் திட்டமிடல்) பிரகாரம், பயனுள்ள கண்காணிப்பு மற்றும் முறையான நிறைவேற்றலை இலகுபடுத்துவதற்காக பெறுகைத் திட்டமானது பெறுகைச் செயற்பாடுகளுக்கான யதார்த்தமான கால அட்டவணையையும், முக்கிய இலக்குகள் மற்றும் நடைமுறைப்படுத்தல் காலவரையறை ஆகியவற்றையும் உள்ளடக்கியிருக்க வேண்டியது அவசியமாகும்.<br>இருப்பினும், நிதியியல் துறை பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்தும் செயற்றிட்டத்தின் (FSSNP) பெறுகை பரிமாற்றங்களுக்கான முறையான கண்காணிப்பு (STEP) அமைப்பை மீளாய்வு செய்தபோது, முதலில் திட்டமிடப்பட்ட அடிப்படை காலவரையறையுடன் ஒப்பிடுகையில் பெறுகை நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க தாமதங்கள் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இதில் 68 நாட்கள் முதல் 172 நாட்கள் வரையிலான தாமதங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.<br>மேலும், தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் மற்றும் பொது விழிப்புணர்வு தந்திரோபாய ஆலோசகர் ஆகியோரை நியமிப்பதற்கான பெறுகை செயல்முறைகள் அங்கீகரிக்கப்பட்ட பெறுகை திட்ட வரைபடத்தின்படி முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை | உடன்படப்பட்ட கால வரையறைக்கு இணங்க பெறுகை முன்னேற்றம் குறித்த காலாண்டு மீளாய்வு, உலக வங்கிக்கு முன்னேற்ற அறிக்கைகளைச் சமர்ப்பித்தல், நடைமுறைப்படுத்தல் ஆதரவுக் பணிகளின் போது STEP அமைப்பில் பதிவுசெய்யப்பட்ட பெறுகை நிலவரங்களை மீளாய்வு செய்தல் மற்றும் காலாண்டு திட்ட வழிகாட்டும் குழு கூட்டங்களில் பெறுகை முன்னேற்றங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றின் ஊடாக பெறுகைக் கால வரையறை வழக்கமாக கண்காணிக்கப்பட்டு தொடர்புடைய தரப்பினருக்குத் தெரிவிக்கப்பட்டு வந்தன. எவ்வாறாயினும், ஆரம்ப விளம்பரத்தின் மூலம் தகுதியான ஆலோசகர்கள் எவரும் அடையாளம் காணப்படாததால் ஆலோசனை வாய்ப்புகளை இருமுறை மீண்டும் விளம்பரப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டதன் காரணமாக, பொது விழிப்புணர்வு தந்திரோபாய ஆலோசகர் மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் ஆகியோரைத் தேர்ந்தெடுப்பது ஆரம்பத்தில் திட்டமிட்டதை விட அதிக காலத்தை எடுத்துக்கொண்டது. உலக வங்கியின் பெறுகை ஒழுங்குவிதிகளுக்கு இணங்க பரிந்துரைக்கப்பட்ட நடைமுறை ஒழுங்குகள், அனுமதிகள் மற்றும் அங்கீகாரங்களை நிறைவு செய்வதற்கும், தேர்வுச் செயன்முறையில் வெளிப்படைத்தன்மை, நியாயத்தன்மை மற்றும் நேர்மைத்தன்மையை உறுதி செய்வதற்கும் இக்கூடுதல் காலம் தேவைப்பட்டது. | திட்டத் தாமதங்களைத் தவிர்ப்பதற்காக, பெறுகைச் செயற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்ட பெறுகைத் திட்டம் மற்றும் அடிப்படை காலவரையறை ஆகியவற்றிற்கு இணங்க கண்டிப்பாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | என்பதுடன், 2025 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை அவை நிறைவடையாமல் காணப்பட்டன. | | |
| (ஆ) | நிதியியல் துறைப் பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்தும் செயற்றிட்டத்தின் (FSSNP) கூறு 1 இன் கீழ் செயல்திறன் சார்ந்த நிபந்தனைகளை (PBCs) அடைவது திட்டமிட்ட கால அட்டவணையை விடப் பின்தங்கியிருந்தது. திட்ட நடைமுறைப்படுத்தலின் முதல் இரண்டு ஆண்டுகளுக்குள் அடைவதற்கெனத் திட்டமிடப்பட்ட எட்டு (8) செயல்திறன் சார்ந்த நிபந்தனைகளில் PBCs, 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்றிருந்தவாறு ஐந்து (5) நிபந்தனைகள் மாத்திரமே முழுமையாக அடையப்பட்டிருந்ததுடன், ஏனைய மூன்று (3) நிபந்தனைகளும் சராசரியாக 62.5 சதவீத நிறைவு வீதத்துடன் பகுதியளவில் மாத்திரமே அடையப்பட்டிருந்தன. குறிப்பாக, இலங்கை வைப்புக்காப்புறுதித் திட்டம் (SLDIS) பற்றிய பொதுமக்களின் விழிப்புணர்வை அளவிடுவதற்காக நாடளாவிய ரீதியில் பிரதிநிதித்துவக் கணிப்பொன்றை நடத்துவது தொடர்பான, 2024 திசெம்பர் 31 ஆம் திகதிக்குள் நிறைவு செய்யப்பட அட்டவணையிடப்பட்டிருந்த PBC 6 ஆனது, 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்றிருந்தவாறு 95 சதவீத முன்னேற்ற மட்டத்துடன் நிறைவடையாத நிலையிலேயே காணப்பட்டது. மேலும், 2025 திசெம்பர் 31 ஆம் திகதிக்குள் நிறைவு செய்யப்பட வேண்டியிருந்த இலங்கை மத்திய வங்கியின் (CBSL) ஆளும் சபையினால் நீண்டகால பொது விழிப்புணர்வு தந்திரோபாயத்திற்கு அங்கீகாரம் வழங்கும் செயலானது அத்திகதியளவில் | நிதியளிப்பு உடன்படிக்கையின் கீழ் முதல் இரண்டு ஆண்டுகளுக்குள் எட்டு செயல்திறன் சார்ந்த நிபந்தனைகள் (PBCs) எய்தப்பட வேண்டும் என அட்டவணையிடப்பட்டிருந்த போதிலும், காண்பிக்கப்பட்ட திருப்திகரமான முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு, 2026 சனவரி 12 முதல் 21 வரை நடத்தப்பட்ட இடைக்கால மீளாய்வு குழுவை தொடர்ந்து வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வ செயற்பாட்டுக்குறிப்பு ஊடாக, உலக வங்கியானது PBCs 4, 6 மற்றும் 8 ஆகியவற்றுக்கான இலக்குத் திகதிகளை 2026 ஜீன் வரை மாற்றியமைத்தது. உலக வங்கி மற்றும் வைப்புக்காப்புறுதி ஆலோசகருடன் கலந்தாலோசித்து வினாக்கொத்தை இறுதி செய்வதற்கும், முன்னோடி ஆய்வொன்றை நடத்தி அதன் மூலம் பெறப்பட்ட பின்னூட்டங்களை உள்ளடக்குவதற்கும் தேவைப்பட்ட கால அவகாசம் காரணமாக நாடளாவிய ரீதியிலான பிரதிநிதித்துவக் கணிப்பு தாமதமடைந்தது. அத்துடன், கணிப்பின் மூலம் பெறப்பட்ட முடிவுகளை உலக வங்கி மற்றும் வைப்புக்காப்புறுதி மற்றும் DIRD குழுக்கள் ஆய்வு செய்வதற்கு மேலதிக காலம் தேவைப்பட்டதுடன், நிலவிய “Dittva” இயற்கை அனர்த்தமும் இக்கணிப்பின் இறுதிநிலை நிறைவாக்கத்தைப் பாதித்தது.<br><br>தகுதி அளவுகோல்களுடன் இணங்காமைக் காரணமாக விருப்பம் தெரிவிக்கும் விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டதால், 2025 ஜீலை 16 அன்று | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| 20 சதவீத முன்னேற்றத்தை மாத்திரமே எய்தியிருந்தது. | விளம்பரப்படுத்தப்பட்ட ஆரம்பக் பெறுகை தோல்வியுற்றதைத் தொடர்ந்து, நீண்டகால பொது விழிப்புணர்வு தந்திரோபாயமும் தாமதமடைந்தது. அதன் பின்னர், செயல்பாட்டு வரையறைகளின் திருத்தங்களை மேற்கொண்டு இப்பெறுகை 2025 செப்டம்பர் 30 ஆம் திகதி மறுவிளம்பரம் செய்யப்பட்டதுடன், விலைகேள்வி மதிப்பீட்டின் போது விலைமனுதாரர்களிடமிருந்து விளக்கங்கள் மற்றும் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் மேலதிக காலம் தேவைப்பட்டது. | |

## 2.2 அமைப்புகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள்

| | கணக்காய்வின் அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உலக வங்கியின் நிதியுதவியுடனான நிதியியல் துறைப் பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்தும் செயற்றிட்டத்தின் (FSSNP) செயற்றிட்ட வழிகாட்டும் குழுவிற்கான (PSC) செயல்பாட்டு வரையறைகளின் 04 ஆம் பிரிவின் பிரகாரம், இக்குழுவானது தனது பணிகளை நிறைவேற்றுவதற்காகக் குறைந்தது காலாண்டுக்கு ஒருமுறையாவது கூட வேண்டும் என்பது அவசியமாகும். எவ்வாறாயினும், 2025 செப்டம்பர் 30 அன்று நடத்தப்பட்ட கூட்டத்தைத் தொடர்ந்து இக்குழுவானது 2026 பெப்ரவரி 16 மட்டுமே கூடியுள்ளது என்பது வெளிப்பட்டது. அதற்கமைய, 2025 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டிற்காக எவ்வித PSC கூட்டமும் நாடாத்தப்பட்டிருக்கவில்லை. | ஆரம்பத்தில் 2025 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டிற்கு திட்டமிடப்பட்டிருந்த 8 ஆவது செயற்றிட்ட வழிகாட்டும் குழு (PSC) கூட்டம் ஒத்திவைக்கப்பட்டு, 2026 சனவரியில் நடத்தப்பட்ட உலக வங்கியின் இடைக்கால மீளாய்வு குழுவை (MTR) தொடர்ந்து 2026 பெப்ரவரி 16 ஆம் திகதி நடத்தப்பட்டது. இந்த MTR இல் செயற்றிட்ட நடைமுறைப்படுத்தல் மற்றும் முன்மொழியப்பட்ட மறுசீரமைப்பு குறித்த முக்கிய கலந்துரையாடல்கள் உள்ளடங்கியிருந்ததால், அக்கூட்டத்தைக் கூட்டுவதற்கு முன்னர் MTR முடிவுகள் குறித்து PSC தெளிவுபடுத்துவது அவசியமாகக் கருதப்பட்டது. இலங்கை மத்திய வங்கி மற்றும் திறைசேரியின் சிரேஷ்ட அதிகாரிகள் உட்பட PSC உறுப்பினர்களின் வருகைக்கான வாய்ப்புகள் குறைபாடு காரணமாக, தனியான கூட்டங்களை ஏற்பாடு செய்ய முடியாமல் போனது. இத்திருத்தப்பட்ட ஏற்பாடு உலக வங்கிக்குத் தெரிவிக்கப்பட்டு, | PSC தனது செயல்பாட்டு வரையறைகளின் குறிப்பிடப்பட்டுள்ள காலாண்டு கால இடைவெளியை கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அவர்களினால் உடன்படப்பட்டிருந்தது. | |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் மீதிகளை திறைசேரிப் பதிவுகளுடன் இணக்கம் செய்து அவை உடன்படுவதை உறுதிசெய்வது திட்ட முகாமைத்துவப் பிரிவின் (PMU) பொறுப்பாக இருந்தபோதிலும், அப்பதிவுகளை திறைசேரிப் பதிவுகளுடன் இணக்கம் செய்வதற்குப் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், XDR நாணய அலகில் குறிக்கப்பட்ட கடன் மீதிகள் திறைசேரிப் பதிவுகளுடன் உடன்படுவது கண்டறியப்பட்ட அதேவேளை, அதற்குச் சமனான ரூபா மீதிகளில் குறிப்பிடத்தக்க வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக, ரூபா 1,201.6 மில்லியன் கொண்ட இம்மாறுபாடானது 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்றிருந்தவாறு எவ்வித விளக்கமுமின்றியும் இணக்கம் செய்யப்படாமலும் காணப்பட்டது. | நிதியியல் துறைப் பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்தும் செயற்றிட்டத்தின் (FSSNP) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்றிருந்தவாறான IDA கடன் மீதியானது 40,396,376,815.82 ரூபாவாகும் என்பதுடன், இது சரியானது எனவும் கணக்காய்வினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது USD மற்றும் XDR நாணய அலகுகளின் அடிப்படையிலான கடன் மீதியானது செயற்றிட்டத்தின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்கிப்போகின்றது. மத்திய வங்கியின் வெளிநாட்டு நிதித் திணைக்களத்தினால் மற்றும் இலங்கை வைப்புக்காப்புறுதி நிதியத்தினால் பயன்படுத்தப்பட்ட நாணய மாற்று வீதமான, 31.12.2025 அன்றிருந்தவாறான இலங்கை CBSL குறித்துரைக்கப்பட்ட அமெரிக்க டொலர் SPOT நாணய மாற்று வீதமான 309.9944 இன் படி, 130,313,247 USD கொண்ட IDA கடன் மீதி மாற்றப்பட்டுள்ளதுடன், இதுவே இச் செயற்றிட்டத்தின் நிதிக்கூற்றுக்களுக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், திறைசேரியின் அதற்குச் சமனான ரூபா மீதியில் வேறுபாடொன்று காணப்படுவதுடன், அது குறித்து எம்மால் திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களின் பதிலின் பிரகாரம், நாணய மாற்று வீதத்தில் ஏற்பட்ட வேறுபாடே இவ்வித்தியாசத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதுடன், அது குறித்து அவர்கள் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றனர். | XDR நாணய அலகில் குறிக்கப்பட்ட கடன் மீதிகள் ஏற்கனவே திறைசேரிப் பதிவுகளுடன் உடன்படுவதனால், ரூபா மாற்றத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட குறிப்பிட்ட நாணய மாற்று வீதங்கள் குறித்து ஆராய்வதற்கு PMU திறைசேரியுடன் உடனடியாக ஒருங்கிணைந்து செயற்படுதல் வேண்டும். அதற்குச் சமனான ரூபா மீதி மாறுபாட்டிற்கான காரணத்தைக் கண்டறிவதற்கும், தேவையான நிதிசார் சரிசெய்தல்களை உடனடியாக மேற்கொள்வதற்கும் விரிவான இணக்கம் செய்கையொன்று உடனடியாக மேற்கொள்ள வேண்டும். |